பதிப்புரிமை வரையறுக்கப்பட்டது

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA



# நிறைவேற்றுனர் மட்டம் II

# KE 3 Fundamentals of Law

# (வழிகாட்டி பத்திரம்)

**பரீட்சையாளருக்கான அறிவுறுத்தல்கள்**

(1) வழங்கப்படும் நேர அளவு: வாசிக்கவும் திட்டமிடவும் – 10 நிமிடங்கள்
எழுதுவதற்கு – 90 நிமிடங்கள்

(2) பிரிவு 1(a): பத்து (10) பல்தேர்வு (MCQs) வினாக்கள் – **அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.**

பிரிவு 1(b): ஐந்து (5) குறுவிடை வினாக்கள் – **அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.**

பிரிவு 2: இரண்டு (2) குறுகிய களநிலை வினாக்கள் – **அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.**

(3) அனைத்து வினாக்களுக்குமான சரியான விடையானது உங்களுக்கு வழங்கப்படுகின்ற விடைத்தாளில் எழுதப்பட வேண்டும்.

பிரிவு 1(a) இற்கான சரியான விடையானது உங்களுக்கு வழங்கப்படுகின்ற விசேஷட தாளில் எழுதப்பட வேண்டும். மிகப் பொருத்தமான விடையின் எழுத்தானது (A, B, C அல்லது D) குறித்த வினாவின் எண்ணிற்கு எதிராக, தரப்பட்ட தாளில் எழுதப்பட வேண்டும்.

(4) பிரிவு 2 இன் ஒவ்வொரு வினாக்களுக்குமான விடைகள், விடையளிப்பதற்கான புத்தகத்தின் தனித்தனிப் பக்கத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(5) அனைத்து விடைகளும் நீங்கள் பரீட்சைக்கு **விண்ணப்பித்த அதே மொழியில்** மாத்திரம் வழங்கப்பட வேண்டும்.

K

E

3

## பிரிவு 1

| |
|---|
| *அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.*<br>*பிரிவு ஒன்று (1) க்கான மொத்தப் புள்ளிகள் - 30 புள்ளிகள்.*<br>*இந்தப் பிரிவிற்கான பரிந்துரை செய்யப்பட்ட நேர அளவு - 54 நிமிடங்கள்* |

### பிரிவு 1(a)

**வினா 01**

மிகவும் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

1.1. பின்வருவனவற்றில் எந்த கூற்று <u>சரியானது</u>?

A. இலங்கையின் பட்டயக்கணக்கறிஞர் நிறுவகமானது, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் கீழ் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.
B. கம்பனிகள் பதிவாளர் திணைக்களமானது 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
C. பிணைகள்\காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவானது இலங்கையின் பங்குச் சந்தையின் முதல்வராகும்.
D. இலங்கை முதலீட்டு சபையானது, 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

**(2 புள்ளிகள்)**

1.2 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டத்தின் படி பின்வருவனவற்றில் எது <u>சரியானது</u> ?

A. சட்டத்தின் பிரதான நோக்கமானது, இலங்கையின் பண மோசடியை ஒழுங்குப்படுத்துதலாகும்.
B. பணம் பெறப்பட்ட உண்மையான வழிவகையை வெளியிடாமல் முறையற்ற விதத்தில் பணத்தை சேர்த்து வைத்திருத்தல் பண மோசடியாகும்.
C. பண மோசடிக்கான ஒரேயொரு தண்டனையானது, தண்டப்பணம் செலுத்துதலாகும்.
D. பண மோசடி செய்தலை தடுக்கும் பொருட்டான ஆணையை குற்றவியல் நீதிமன்ற நீதவான் மாத்திரமே வழங்க முடியும்

**(2 புள்ளிகள்)**

1.3 கைமாற்ற கூடிய சாதனங்கள் தொடர்பில் பின்வருவனவற்றில் <u>சரியானதை</u> தெரிவு செய்க.

A. நிபந்தனையோடு புறக்குறிப்பிடப்பட்ட ஒரு நாணய மாற்று உண்டியல்.
B. கைமாற்றக் கூடிய சாதனத்தை வைத்திருப்பவர் தனது சொந்த பெயரில் வழக்கு தொடுக்க முடியாது.
C. காசோலையின் மீது இரு இணைக் கோடுகள் எழுதப்பட்டு இருக்குமானால், அது குறுக்கு கோடிடப்பட்ட காசோலையாக கருதப்படும்.
D. பணத்தை வழங்குமாறு கட்டளையிடுபவர், பணம் பெறுவோர் (payee) எனப்படுவார்.

**(2 புள்ளிகள்)**

1.4 நாணய மாற்று உண்டியல் மற்றும் காசோலை தொடர்பில் பின்வருவனவற்றில் <u>சரியானது எது?</u>

A. காசோலையானது பணம் செலுத்துதற் பொருட்டு குறிப்பாக வங்கியாளரை நோக்கி எழுதப்படுவதனால் நாணய மாற்று உண்டியலில் இருந்து சிறப்புத் தன்மையுடையதாக அமைகிறது.
B. குறிப்பிட்ட தொகை பணமானது குறிப்பிட்ட நபருக்கானது என பெயரிடப்பட்டிருந்து, அதிகாரத்துடன் கோரும் போதே பணத்தை பெற கூடியதாக இருக்குமாறு எழுதப்பட்ட சாதனமே நாணய மாற்று உண்டியலாகும்.
C. குறிப்பிட்ட பணத் தொகையை பெயரிடப்பட்ட நபருக்கு செலுத்துமாறு வாய்மொழி மூலமாக வழங்கும் வாக்குறுதியும் நாணய மாற்று உண்டியலாக இருக்க முடியும்.
D. குறித்த பணத்தொகையை பெயரிடப்பட்ட நபருக்கு குறிப்பிட்ட திகதியில் வழங்குமாறு எழுதப்படும் வாக்குறுதியே காசோலையாகும்.

**(2 புள்ளிகள்)**

1.5 பின்வருவனவற்றில் வியாபாரஞ்சார் முகவருக்கு பொருத்தமான விவரணம் எது?

A. பொருட்களை வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ, பொருள் விற்பனைக்காக கையெழுத்திடவோ அல்லது அடகு மூல பொருட்களுக்கான பணத்தை பெறவோ தனது முதல்வரை பிணிப்பதற்கு அதிகாரத்தை பெற்ற நபர்.
B. முதல்வருடைய பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்ய நம்பிக்கையாக ஒப்படைக்கப்பட்ட நபர்.
C. முதல்வரினுடைய வெளிப்படையான அதிகார வழங்கல் மூலம் முகவராக செயற்படும் நபர்.
D. முதல்வரினுடைய வெளிப்படையான அல்லது வெளிப்படையாக தெரிகின்ற அதிகார வழங்கல் மூலம் முகவராக செயற்படும் நபர்.

**(2 புள்ளிகள்)**

1.6 மீனா என்பவர் பல்பொருள் அங்காடிக்கு சென்றிருந்த வேலை, ரூ2000 என விலை ஒட்டப்பட்டிருந்த இஸ்திரி பலகை ஒன்றை பார்த்து அதனை கொள்வனவு செய்யும் நோக்கில் குறித்த கடையில் காசு கொடுக்கல் வாங்கள் செய்பவரிடம் கொண்டு சென்று ரூ2000 கொடுத்த போது, பலகையில் ஒட்டப்பட்டிருந்த விலை தாளானது பிழையெனவும் சரியான விலை ரூ3000 எனவும் குறித்த கணக்குப் பணியாளர் குறிப்பிடுகிறார்.

ஒப்பந்த வாசகங்களை பொருத்தமட்டில் பின்வருவனவற்றில் விலைத்தாளுக்கு பொருத்தமான விவரணம் எது?

A. கொடைமுனைவு
B. எதிர் கொடைமுனைவு
C. விற்பனைக்கான அழைப்பு
D. ஏற்பு

**(2 புள்ளிகள்)**

1.7 பின்வருவன 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் தொடர்பானது.

இவற்றில் எது <u>சரியானது</u>?

A. சட்டத்தின் நோக்கெல்லையை அடைந்துக் கொள்ள ஒரு தொழில் தருநர் குறைந்தபட்சம் 5 தொழிலாளிகளை தன்னகத்தே வைத்திருக்க வேண்டும்.
B. ஒரு தொழிலாளி பணிக்கொடை பெற்றுக் கொள்ள உரித்தாவதற்கு, குறைந்தபட்சம் பத்து வருடங்கள் ஒரே தொழில் தருநரின் கீழ் வேலை செய்திருக்க வேண்டும்.
C. ஒரு தொழிலாளி மோசடியான செயலுக்காக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டு, அதன் மூலம் தொழில் தருநர் நஷ்டமடைந்திருந்தாலும் அதனை தொழிலாளியின் பணிக்கொடையிலிருந்து கழித்துக் கொள்ள முடியாது.
D. தோழில்தருநரினால் ஓய்வூதிய சுற்று நிருபம் அமைக்கப்பட்டு ஓய்வூதியம் பெறும் தொழிலாளிக்கு இந்தச் சட்டமானது ஏற்புடையதாகாது.

**(2 புள்ளிகள்)**

1.8 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க தொழிலாளிகள் சேமநல நிதியச் சட்டத்தின் படி தொழிலாளிகள் சேமநல நிதியானது தொழிலாளியின் ஊதியத்திலிருந்து வழங்கப்படக் கூடியது.
பின்வருவனவற்றில் தொழிலாளிகள் சேமநல நிதி கணக்கெடுப்பிற்கான ஊதியமாக கொள்ளப்படுவது எது?

A. மேலதிக நேர கொடுப்பனவு
B. வாடகை கொடுப்பனவு
C. உணவிற்கான கொடுப்பனவு
D. போக்குவரத்திற்கு செலவு செய்த பணத்திற்கு ஈடு செய்தல்.

**(2 புள்ளிகள்)**

1.9 பின்வருவனவற்றில் வலிதான ஒப்பந்தமொன்றின் கூறுகளினுள் <u>அடங்காதது</u> எது?

A. ஒப்பந்தமொன்று கட்டாயம் எழுத்தில் காணப்பட வேண்டும்.
B. இரு கட்சிக்காரர்களும் கட்டாயம் இணக்கம் தெரிவித்திருக்க வேண்டும்
C. வலிதான கொடைமுனைவு காணப்பட வேண்டும்.
D. சட்டத்தால் பிணிக்கின்ற தொடர்பினை ஏற்படுத்துவதற்கு கட்சிக்காரர்கள் உடன்பட்டிருக்க வேண்டும்.

**(2 புள்ளிகள்)**

1.10 சட்டத்தின் பொதுவான பாகுபாடு ''பொதுச் சட்டம்'' மற்றும் ''தனியார் சட்டம்'' ஆகும்

பின்வருவனவற்றில் ''தனியார் சட்டம்'' என்ற வரையறையினுள் உள்ளடங்குபவை எவை?

A. குடும்பச் சட்டம் மற்றும் வணிகச் சட்டம்
B. வணிகச் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டம்
C. அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஆதனச் சட்டம்
D. நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம் மற்றும் நிர்வாகச் சட்டம்

**(2 புள்ளிகள்)**

## பிரிவு 1(b)

**வினா 02**
*செய்கை வினைச் சொற்களின் மீது கவனம் செலுத்தி அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை அளிக்குமாறு நீர் வேண்டப்படுகிறீர்.*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

(2.1) ஒழுங்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுமிடத்து நீதிமன்றமானது ஒரு வழக்காற்றினை சட்டத்தின் மூலாதாரமாக இணங்கண்டு கொள்ளும். அவ்வாறான நிபந்தனைகள் 2 **தருக.**

**(2 புள்ளிகள்)**

(2.2) அவசியத் தேவை முகவராண்மை உருவாக்கபடுவதற்கு தேவையான நிபந்தனைகள் 2 **தருக.**

**(2 புள்ளிகள்)**

(2.3) முகவரினால் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவு மற்றும் செல்லுபடியாந் தன்மை பற்றி **விளக்குக.**

**(2 புள்ளிகள்)**

(2.4) இலங்கையில் ஏற்புடையதான பங்குடமை சட்டத்தின் படி ஒரு பங்குடமையை தாபிப்பதற்கான 4 பிரதான தேவைப்பாடுகளை **பட்டயற்படுத்துக.**

**(2 புள்ளிகள்)**

(2.5) ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் வியாபாரத்திற்கான அழைப்பின் நோக்கெல்லையை விபரிக்கும் வகையில் 2 எடுத்துக் காட்டுக்கள் **தருக.**

**(2 புள்ளிகள்)**

## பிரிவு 2

*அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.*
*இந்தப் பிரிவிற்கான மொத்தப் புள்ளிகள் - 20 புள்ளிகள்.*
*பிரிவு 2 க்கான பரிந்துரை செய்யப்பட்ட நேர அளவு - 36 நிமிடங்கள்*

**வினா 03**

*1 ஜனவரி 2016:* மூன்று மில்லியன் ரூபாய்களுக்கு தன்னுடைய காணியை விற்பதாக சுனி, ருனிக்கு கொடைமுனைவு செய்தார். கொடைமுனைவானது ஜனவரி மாதம் 10 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ தபால் மூலம் மாத்திரமே ஏற்கப்பட வேண்டுமென்று சுனியுடைய கொடைமுனைவில் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

*8 ஜனவரி 2016:* முறைாக முகவரியிடப்பட்டு முத்திரையொட்டப்பட்ட ஏற்ப்புக்கான கடிதமானது ருனியினால் தபால் பெட்டியினுள் இடப்பட்டது.

*9 ஜனவரி 2016:* தன்னுடைய காணியை விற்பதல்ல என முடிவு செய்த சுனி, தன்னுடைய கொடைமுனைவை உடனடியாக திரும்பப் பெறுவதாக தொலைபேசியின் ஊடாக ருனிக்கு அறியத்தந்தார்.

**உம்மிடம் வேண்டப்படுவது:**

**விளக்குக;**

(a).தபால் மூலமாக ஏற்பு செய்வது தொடர்பான சட்டக் கொள்கைகள் **(3 புள்ளிகள்)**

(b).கொடைமுனைவை திரும்பப் பெறுதல் தொடர்பிலான சட்டக் கொள்கைகள். **(3 புள்ளிகள்)**

(c).சுனி மற்றும் ருனி ஆகியோருக்கிடையில் வலிதான ஒப்பந்தம் ஒன்று உருவானதா? **(4 புள்ளிகள்)**

**(மொத்த புள்ளிகள் 10)**

**வினா 04**

கமல் என்ற மொத்த வியாபாரியிடமிருந்து சிவப்பு பாஸ்மதி அரிசியின் மாதிரியினை ஒரு கடையின் சொந்தக்காரரான அமல் பரீட்சித்தார்.

பரீட்சிப்பின் போது திருப்தியடைந்த அமல் 100 பைகள் சிவப்பு பாஸ்மதி அரிசியினை கமலிடமிருந்து கொள்வனவு செய்தார்.

பின்னர், அமலினுடைய கடையிலிருந்து 1 பை சிவப்பு பாஸ்மதி அரிசியினை கயானி கொள்வனவு செய்தார்.

வீட்டிற்கு சென்று பையினை பிரித்து பார்த்த போது சிவப்பு பாஸ்மதி அரிசியுடன் சிவப்பு பருப்பு கலந்திருப்பதனை கயானி கண்டார்.

**உம்மிடம் வேண்டப்படுவது:**

**(a)** பொருள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற் சொன்ன சூழலுக்கு ஏற்புடையதாக்கப்படக் கூடிய சட்ட கொள்கைகளை கட்சிக்காரர்களின் சார்பில் **விளக்குக.**

(1) ஒரு கொள்வனவாளர் என்ற வகையில் கயானி **(3 புள்ளிகள்)**

(2) ஒரு கொள்வனவாளர் என்ற வகையில் அமல் **(3 புள்ளிகள்)**

**(b)** பொருள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ் கயானி மற்றும் அமல் இருவருக்குமாக பரிகாரங்களை **இணங்காண்க.**

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**